# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,**
**தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590**

**ஆணை நாள்: 06.09.2019 (முற்பகல்)**

**விசாரணை நடைபெற்ற இடம்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு.**

**முன்னிலை**

## திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,

**மாநில தகவல் ஆணையர்**

...............

## வழக்கு எண். SA8687/D/2017

திரு. ஆர்.பழனிச்சாமி ... மேல்முறையீட்டாளர்

**எதிர்**

பொதுத் தகவல் அலுவலர்,
ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலத்துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இன்று (06.09.2019) ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. ஆர்.பழனிச்சாமி மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகவில்லை மேலும் அவருக்கு பதில் திரு.அ. செந்தில்குமரன், கண்காணிப்பாளர், ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலத்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு மாவட்டம், ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(3)-ன் கீழ் 09.11.2017 அன்று தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மேல்முறையீட்டாளர் 01.08.2017 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனு மற்றும் 10.09.2017 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்.

3. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 01.08.2017 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில், திரு.P.சரவணக்குமார், த/பெ.பழனிச்சாமி, புஞ்சைதுறையம்பாளையம் கிராமம், கோபி வட்டம் என்பவர் இந்து பண்டி சாதிச்சான்று பெற்றது சாதி மெய்தன்மை அறிய பாரிமுருகன், மாவட்ட விழிக்கண் குழுவின் உறுப்பினர் மற்றும் மானுடவியல் வல்லுநர் சென்னைப் பல்கலைக்கழகம் சென்னை அவர்கள் சாதி மெய்தன்மை குறித்து விசாரணை செய்து விசாரணை அறிக்கை மாவட்ட விழிகண் (மூன்று நபர்) குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. கடிதம் ந.க.எண்.58340/2008 இ.க.நாள்.08.10.2009 மற்றும் 09.04.2010 மற்றும் கோபி வருவாய் கோட்ட அலுவலர் அவர்கள் விசாரணை செய்து மாவட்ட விழிக்கண் (மூன்று நபர்) குழுவிற்கு கோபி வருவாய் கோட்ட அலுவலர் அவர்கள் கடித எண்.11982/2008/ஆ1 நாள்: 20.07.2009ம் நாள் சாதி மெய்தன்மை விசாரணை செய்யப்பட்டு விசாரணை அறிக்கை அனுப்பட்டுள்ளது என்றும் இவர்கள் சாதி மெய் தன்மை குறித்து விசாரணை செய்த விசாரணை அறிக்கையின் நகல் வழங்க கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

4. பொதுத் தகவல் அலுவலர் 17.08.2017 மற்றும் 17.10.2017 ஆகிய தேதியிட்டு மேல்முறையீட்டாளருக்கு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் மூன்றாம் நபர் தகவல் என்பதால் தமிழ்நாடு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 8(1)(j)ன்படி வழங்க இயலாது என மறுத்துள்ளார். என தெரிவித்து, 10.09.2017 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலர் எந்த தகவலும் வழங்கவில்லை என தெரிவித்து 09.11.2017 தேதியிட்டு பிரிவு 19(3)ன் கீழ், இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்து, தான் கோரிய இனங்களுக்கான தகவல்களை பெற்றுத்தருமாறு ஆணையத்தைக் கேட்டுள்ளார். அம்மனுவின் மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5. விசாரணையின்போது ஆஜரான மேல்முறையீட்டாளர் பொதுத்தகவல் அலுவலர் தனக்கு சரியான பதில் அளிக்கவில்லை என்றும், தான் கோரிய தகவல்கள் மூன்றாம் நபர் தகவல்கள் இல்லை என்றும், தான் கோரிய தகவல்களை தனக்கு பெற்றுத்தருமாறு கேட்டுக்கொண்டார்.

6. விசாரணையின்போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் கோரிய விசாரணை அறிக்கையின் நகல் மூன்றாம் நபர் சார்ந்த தகவல்கள் என்றும் எனவே தகவல் அறியும் உரிமைச்சட்டம் 8(1)(j) கீழ் அளிக்க இயலாது என கூறினார்.

7. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்ததில் ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது :

- **இன்றைய விசாரணைக்கு பொதுத்தகவல் அலுவலர் ஆஜராகவில்லை அவருக்கு பதிலாக திரு.செந்தில்குமரன் ஆஜரானார். விசாரணைக்கு பொதுத்தகவல் அலுவலர் ஏன்**

ஆஜராகவில்லை என்றும் அவருக்கு பதிலாக அங்கீகரிப்பட்ட பிரதிநிதியாக செந்தில்குமரன் ஆஜராவார் என்று பொதுத்தகவல் அலுவலர் கடிதம் ஏன் அளிக்கவில்லை என்று அறிக்கை ஒன்றினை தயார் செய்து ஆணையத்திற்கு நேரிலோ அல்லது கடிதம் வாயிலாகவோ சமர்பிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

- மேல்முறையீட்டாளர் கேட்டுள்ள தகவல்கள் மூன்றாம் நபர் சார்ந்த தகவல் இல்லை என ஆணையம் கருதுகிறது. மேல்முறையீட்டாளர் கோரிய சாதி மெய்தன்மை பற்றிய விசாரணை செய்த விசாரணை அறிக்கையின் நகல் அரசு கோப்பில் உள்ள ஒரு ஆவணம் ஆகும். எனவே, மேல்முறையீட்டாளர் கேட்டுள்ள தகவல்களை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)ன் படி கட்டணமின்றி மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு இவ்வழக்கின் மீதான விசாரணை இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது.

(ஒம்/- **ச.த. தமிழ்குமார்)**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண். SA8687/D/2017</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்,
ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலத்துறை,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>

திரு. ஆர்.பழனிச்சாமி,
எண்.32, காமராஜர் வீதி,
ஒட்டர்பாளையம், பெரிய கொடிவேரி அஞ்சல்,
கோபிச்செட்டிபாளையம் வட்டம்,
ஈரோடு மாவட்டம் - 638 503.

Copy to: Judgement File.
Spare/ TG/PC-19/09/2019